Selvasanthi Publication

ஞானோதயம் 2020

தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

முன்னோடிப் பரீட்சை

வினாத்தாள் - I

நேரம் - 45 நிமிடங்கள்

(புதிய பாடத்திட்டம்)

01

ஆசிரியர்கள்
திரு. செ. திலக்
திரு. செ. வினோத்குமார்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாத் தொகுதிகள் உள்ளன.
- அனைத்து வினாக்களிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீசிலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	

பக்கம் 2 ஐ பார்க்க...


www.ikedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

● முதலில் தரப்பட்டுள்ள உருக் கூட்டத்து ன் தொடர்புபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.

1)











(1) 


(2) 

(3) 

2)

(1) 

(2) 

(3) 

● ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கிய தொடர்புபட்ட சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிக.

3)

(1)	(2)	(3)
சீமாட்டி	மாணவன்	ஜனாதிபதி
உத்தமி	மாற்றான்	அதிபர்
குழந்தை	மருத்துவச்சி	ஆளுநர்
குயவன்	வியாபாரி	நோயாளி

4)

(1)	(2)	(3)
பரவை	களிறு	ஞானம்
ஆழி	யானை	புத்தி
மோதிரம்	வேழம்	அறிவு
கடல்	பரி	ஞாபகம்

5) தரப்பட்ட பாடலில் A,B ஆகிய இடங்களில் வரவேண்டிய சொற்களைத் தெரிக.

ஓடி விளையாடு பாப்பா - நீ
.....A..... பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
.....B..... வையாதே பாப்பா

(1) A - ஓய்ந்திருக்கலாகாது B - முதியவரை

(2) A - ஓய்ந்திருக்கலாகாது B - குழந்தையை


(3) A - படிக்கவேண்டும் B - குழந்தையை

www.lkedu.lk

சுட்டெண் : .....

● எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிக.

6)




(1) 28

(2) 30

(3) 35

7)



(1) 36

(2) 18

(3) 41

● தரப்பட்டுள்ள கவிதையைப் பயன்படுத்தி விடையைத் தெரிக.

பூக்களில் வண்டுகள் தேன் குடிப்பதைப் பாரீர்
மகிழ்வுடன் கீதம் இசைப்பதைக் கேளீர்
சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும்
செல்வதைப் பாரீர் அதோ செல்வதைப் பாரீர்

8) இக் கவிதை கூறுவது.

(1) சோலைகளின் அழகு பற்றி.

(2) காலை வேளையின் பாடல் பற்றி.

(3) வண்டுகள் தேன் குடித்து மகிழ்ந்து திரிவதைப் பற்றி.

9) வண்டுகள் இரைந்து செல்வதைக் கவிதையில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?


(1) தேன் குடிப்பதைப் பாரீர்.

(2) கீதம் இசைப்பதைக் கேளீர்.

(3) அங்குமிங்கும் செல்வதைப் பாரீர்.

10) **PENCIL** என்பது **LICNEP** என எழுதினால் **PRINCIPAL** என்பது எழுதப்படும் விதம்


(1) LAPICNIRP (2) NIRPCIPAL (3) LAPIPRINC

11) 

இவ் உருவில் இனங்காணக் கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 10 (3) 11

12) A, B, C ஆகிய எழுத்துக்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிக.



(1) A - வத்தாளை B - பயற்றை C - விளாம்பழம்

(2) A - தக்காளி B - வெண்டி C - மாம்பழம்

(3) A - தக்காளி B - அப்பிள் C - வெண்டி

www.ikedu.lk

13) சாக்சி படிப்பிலும் விளையாட்டிலும் மிகவும் கெட்டிக்காரி. அவளிடம் எவ்வகையான வினாக்களைக் கேட்டாலும் உடனடியாகப் பதில் கூறும் ஆற்றல் உள்ளவள். அப்படிபிருந்தும் ஒருநாள் சரவணன் அவனிடம் வினாவொன்றிற்கான விடையைக் கேட்டபோது அவளால் விடையினைக் கூறமுடியவில்லை. இதனை உணர்த்தும் பழமொழி


(1) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

(2) ஆனைக்கும் அடிசறுக்கும்.

(3) மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

14) வைகாசி மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். அம்மாதத்தில் வருகின்ற புதன்கிழமைகளின் திகதிகளை ஒழுங்குமுறையில் காட்டுவது.

(1) 3, 10, 17, 24, 31 (2) 2, 9, 16, 23, 30 (3) 1, 8, 15, 22, 29

15) 

வாணன் 35cm நீளமுள்ள ஈர்க்குக்குச்சிகளைப் பயன்படுத்தி அருகே உள்ள சதுரமுகி வடிவத்தை அமைத்தான். அவன் பயன்படுத்திய ஈர்க்குக் குச்சிகளின் மொத்த நீளம் யாது?

(1) 280cm (2) 350m (3) 420cm

16) 1 தொடக்கம் 100 வரையான எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 20 தடவைகள் (2) 21 தடவைகள் (3) 19 தடவைகள்

17) பாடசாலையில் ஒளிவிழா ஒன்றிற்காக 25 மெழுகுவர்த்திகள் ஒரே தடவையில் ஏற்றப்பட்டன. ஒரு மெழுகுவர்த்தி எரிந்து முடிவதற்கு 8 நிமிடங்கள் எடுக்கின்றது. எனின் அனைத்து மெழுகுவர்த்திகளும் எரிந்து முடிவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) 16 நிமிடங்கள் (2) 200 நிமிடங்கள் (3) 8 நிமிடங்கள்

18) அருகே உள்ள முட்கடிகார முகம் காட்டும் நேரத்தைக் கூறக்கூடியது யாது?



(1) காலை 3.30 மணியாகும்.

(2) இரவு 3.30 மணியாகும்.

(3) நேரம் 3.30 மணியாகும்.

www.ikeuu.lk

• வெற்றுக் கூடுகளில் வரவேண்டிய இலக்கங்களைத் தெரிக.

19)

$$\begin{array}{r} 3\square 28 \\ +189\square \\ \hline 5\square 24 \end{array}$$

4	6	6
5	6	6
3	5	3
(1)	(2)	(3)

20)

$$\begin{array}{r} 56\square 0 \\ -\square 795 \\ \hline 28\square 5 \end{array}$$

2	2	2
2	1	4
2	3	5
(1)	(2)	(3)

21) வானிலை அவதானிப்பு மையத்திலிருந்து எதிர்வரும் மூன்று நாட்களுக்கு வடமேல் மற்றும் சப்ரகமுவா மாகாணங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் எனக் கூறப்பட்டது. எனின் மழை பெய்யக் கூடிய இரு மாவட்டங்கள் முறையே

(1) புத்தளம், இரத்தினபுரி

(2) குருநாகல், மொனராகலை

(3) பொலன்னறுவை, பதுளை

• **தரப்பட்ட விபரத்தை அவதானித்து 22, 23 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**


ரூபாய் 165.00


ரூபாய் 130.00


ரூபாய் 195.00

22) கார்னேசியா பூ ஒன்றின் விலை யாது?

(1) ரூபாய் 50.00 (2) ரூபாய் 65.00 (3) ரூபாய் 80.00

23) மூன்று மலர்களிலும் மூன்று வீதம் வாங்குவதற்குத் தேவையான பணத்தொகை யாது?

(1) ரூபாய் 585.00 (2) ரூபாய் 410.00 (3) ரூபாய் 685.00

24) 2036ம் ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடும் நிறுவனமொன்று ஆரம்பித்த ஆண்டு எது?

(1) 1996ம் ஆண்டு (2) 1986ம் ஆண்டு (3) 2011ம் ஆண்டு

www.ikeduu.lk

25) நகுலன் சந்தையில் முதல்நாள் ரூபாய் 20.00 வீதம் 15 மாம்பழங்களை வாங்கி வந்தான். மறுநாள் மாம்பழம் வாங்குவதற்குச் சென்ற போது ஒரு பழம் ரூபாய் 5.00 இனால் அதிகரித்து இருந்தது. எனின் அவன் முதல் நாள் வாங்கிய பணத்தின் அளவிற்கு இன்று எத்தனை பழங்கள் வாங்க முடியும்?

(1) 15 மாம்பழங்கள் (2) 12 மாம்பழங்கள் (3) 16 மாம்பழங்கள்

26) வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய சொல்லைத் தெரிக.



(1) 

(2) 

(3) 

27) ஒழுங்கு முறையின்றி சம்பவம் ஒன்று தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் தொகுதி

P - அடுத்த பாடம் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குகின்றார்.

Q - பயிற்சிக் கொப்பிகளைப் பார்வையிட்டு ஒப்பமிடுகின்றார்.

R - ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைகின்றார்.

S - மாணவர்களைக் கொண்டு பயிற்சிகளைச் செய்விக்கின்றார்.

T - தமிழ் பாடத்தைக் கற்பிக்கின்றார்.

(1) R, T, S, Q, P (2) P, Q, S, T, R (3) R, T, Q, S, P

28) தற்போது ஆதவனின் வயது 15 ஆகும். அவனின் தம்பியின் வயது 6 ஆகும். இன்னும் எத்தனை வருடங்களின் பின் ஆதவனின் வயது தம்பியின் வயதின் இரு மடங்காக இருக்கும்?

(1) 7 வருடங்கள் (2) 5 வருடங்கள் (3) 3 வருடங்கள்

29) நேற்றைக்கு முதல் நாள் வியாழக்கிழமை ஆகும். நாளை மறுதினத்திற்கும் அடுத்து வரும் திங்கட்கிழமைக்கும் இடையே எத்தனை நாட்கள் உண்டு?

(1) 7 நாட்கள் (2) 6 நாட்கள் (3) 5 நாட்கள்

30) கட்டடம் ஒன்றைக் கட்டும் போது முதலில் கட்ட வேண்டியது எது?

(1) அத்திபாரம் (2) பத்திரிப்பு (3) சுவர்

www.ikedu.lk

31) | 43, 91, 183 | ஆகிய எண்களை எந்த மிகப்பெரிய எண்ணால் வகுக்கும் போது மீதி சமமாகக் கிடைக்கும்?

(1) 8 (2) 7 (3) 4

32) பன்னிரண்டு மாணவர்களுக்குச் சீருடை வாங்குவதற்கு ரூபாய் 3000.00 செலவாகும். எனின் ரூபாய் 1250.00 இற்கு எத்தனை மாணவர்களுக்குச் சீருடை வாங்க முடியும்?

(1) 6 மாணவர்களுக்கு (2) 5 மாணவர்களுக்கு (3) 7 மாணவர்களுக்கு

33) தரப்பட்ட கூற்றுக்களுள் எப்போதும் நடைபெறாத விடயம் எது?

(1) மழை பெய்யும் போது இடி, மின்னல் போன்றன காணப்படும்.


(2) சூரியனைச் சுற்றி அனைத்துக் கோள்களும் வலம் வருகின்றன.

(3) சூரியன் கிழக்கில் உதயமாகி தெற்கில் அஸ்தமனமாகின்றது.

34) முட்கடிகாரம் ஒன்று நேரம் 5.40 ஐக் காட்டுகின்றது. அக்கடிகாரம் உண்மையில் 10 நிமிடங்கள் முந்தி ஓடுகின்றது. ஆனாலும் நான் அக்கடிகாரம் பிந்தி ஓடுவதாக நினைத்து கடிகாரத்தைச் சீர் செய்த பின் கடிகாரம் காட்டும் நேரத்திற்கும் உண்மையான நேரத்திற்கும் இடையில் எத்தனை நிமிடங்கள் வித்தியாசப்படுகின்றது?

(1) 10 நிமிடங்கள் (2) 20 நிமிடங்கள் (3) 15 நிமிடங்கள்

35) சம்பவம் ஒன்றை வெளிப்படுத்தும் படங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அதனை ஒழுங்கு படுத்தும் போது சரியாக அமையும் தொகுதி எது?




(1) A, F, B, C, E, D (2) A, F, E, B, C, D (3) A, F, E, D, C, B


36) ஒரு கூட்டில் 8 மஞ்சள் வர்ணக் குருவிகளும் 10 நீலவர்ணக் குருவிகளும் சில பச்சை வர்ணக் குருவிகளும் இருந்தன. அதில் பச்சை வர்ணக் குருவிகளின் எண்ணிக்கை மஞ்சள் வர்ணக் குருவியை விட அதிகமாகவும் நீல வர்ணக் குருவியை விடக் குறைவாகவும் இருந்தன. அக் கூட்டில் இருந்த குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 27 குருவிகள் (2) 30 குருவிகள் (3) 26 குருவிகள்


www.ikedu.lk

37) 

அருகே தரப்பட்டுள்ள வடிவமானது கண்ணாடியின் முன் வைக்கப்பட்டுள்ளது. அதனைக் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?


(1) 

(2) 

(3) 

38) விமலா 2020ஆம் ஆண்டு ஒவ்வொரு நாளும் ரூபாய் 10.00 வீதம் உண்டியலில் இட்டு சேமிக்க விரும்பியிருந்தாள். எனின் அவள் அவ்வருடம் முழுவதும் உண்டியலில் பணத்தை இட்டால் சேமிக்கக் கூடிய பணத்தொகை யாது?

(1) ரூபா 3650.00 (2) ரூபா 3660.00 (3) ரூபா 3200.00

39) 

அருகே தரப்பட்டுள்ள உருவில் உள்ள மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?

(1) 15 (2) 14 (3) 13

40) இருவர் குறிப்பிட்ட ஓர் இடத்தில் இருந்து எதிரெதிர்த் திசைகளில் 10m தூரம் நடந்து சென்று வலது கைப்பக்கம் திரும்பி 8m தூரம் சென்று மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பி 10m தூரம் நடந்து சென்று நின்றனர். இப்போது அவர்கள் இருவரும் நிற்பது.

(1) இருவருக்கும் இடையில் 16m தூரம் இடைவெளியில்.

(2) இருவருக்கும் இடையில் 8m தூரம் இடைவெளியில்.

(3) பயணத்தை ஆரம்பித்த இடத்தில்.

www.ikedu.lk

Selvasanthi Publication

ஞானோதயம் 2020

தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

முன்னோடிப் பரீட்சை

வினாத்தாள் - II

(புதிய பாடத்திட்டம்)

நேரம் - 1 மணி 15 நிமிடங்கள்

01

சுட்டெண் : .....

ஆசிரியர்கள்
திரு. செ. திலக்
திரு. செ. வினோத்குமார்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாத் தொகுதிகள் உள்ளன.
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரிசிலனையின் மதீப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதீப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	

பக்கம் 2 ஐ பார்க்க...

www.lkedu.lk

01) தரப்பட்ட பந்தியை நன்றாக வாசிக்குக.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப் பந்து போல மெதுவாக மேலெழுகின்றான். கதிரவனைக் கண்ட நிலவுமகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள்.

- **பந்தியை மட்டும் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) நாளொன்றின் எவ்வேளையைக் குறிக்கின்றது? .....

(ii) சூரியன் எத்திசையில் காணப்படுகின்றது? .....

(iii) உவமைத் தொடரை எழுதுக. .....

(iv) பெண்பாற் பெயர்ச் சொல்லை எழுதுக. .....

(v) **'வெட்கத்துடன்'** என்பதைக் குறிக்கும் சொல் எது? .....

(vi) வினையடைமொழிச் சொல்லை எழுதுக. .....

02) உயர்திணை முன்னிலைப் பன்மை வினைச் சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) வந்தார்கள் (2) வாடினாள் (3) வருகின்றீர்கள் (4) மேய்ந்தன

03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்றை எழுதுக.

கானம் / பறந்து / இனிமையாக்குகின்றது / திரியும் / பட்சிகளின் / சூழலை / இனிய

.....

.....

04) பின்வரும் சொற்களில் இரண்டு ஒத்தகருத்துடையவை, இரண்டு எதிர்க் கருத்துடையவை மிகுதியாக உள்ள சொல்லைத் தெரிந்து கோடிடுக.

(i) (1) திண்ணம் (2) சுலபம் (3) முரடு (4) கடினம் (5) உறுதி

(ii) (1) இளமை (2) தொன்மை (3) முதுமை (4) புராதனம் (5) இளைஞர்

05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் " பிழை " எனவும் எழுதுக.

(i) நாம் இருவரும் வகுப்பிற்குச் சென்றேன். ( )

(ii) நூற்றுக்கணக்கான குயவர்கள் வரவழைக்கப்பட்டார்கள். ( )

(iii) அவன் நண்பனின் வீட்டிற்குச் செல்வேன். ( )

(iv) நாளை பெற்றோருக்கான கூட்டம் நடைபெறும். ( )

www.ikedu.lk

சுட்டெண் : .....

06) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதித் திருக்குறளைப் பூர்த்தி செய்க.

எந்நன்றி ..... உய்வுண்டாம் உய்வில்லை

..... கொன்ற மகற்கு

07) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சரியான சொல்லைத் தெரிந்து எழுதுக.

(i) மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ..... ஆகும். (பனி, பணி)

(ii) ஆழம் ..... காலை விடாதே. (அரியாமல், அறியாமல்)

(iii) காண்டாமணி ஓசை காதில் கணீரென ..... கேட்டேன். (ஒலிக்கக், ஒளிக்கக்)

08) பின்வரும் தொடர்மொழிக்கான ஒரு சொல்லை எழுதுக.

(i) ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் - .....

(ii) நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை - .....

09) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(i) குதிரைகளைக் கட்டும் இடம் - [பட்டி, லாயம், தொழுவம்]

(ii) பறவைகளின் மலம் - [விட்டை, பிழுக்கை, எச்சம்]

10) வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.


(i) கடுங் காற்றினால் மரங்கள் சரிந்து ..... (விழுந்தது, விழுந்தன)


(ii) ஆசிரியை எம் இருவரையும் ..... (அழைத்தார், அழைக்கின்றார்கள்)

11) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Rainbow - ..... (ii) Principal - .....

12) பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)  .....

(ii)  .....

www.lkedu.lk

13) பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) a / am / I / book / reading - .....

(ii) two / have / I / cycs - .....

14) தரப்பட்ட சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.


விதுஹல்பதி - .....

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் பெயர் என்ன? - .....

16) பதின்மூவாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று மூன்று எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

17) 


கூட்டில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக.


.....


18) தரப்பட்ட இலக்கங்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதும் போது நடுவில் வரும் எண் யாது?


6696, 6669, 9666, 6966, 6969 - .....

19) முக்கால் பங்கிற்கு நிறந்தீட்டப்பட்டுள்ள உருவின் கீழ்க் கோடிடுக.


(1)


(2)


(3)


(4)

20) தொழிற்சாலை ஒன்றில் மூன்று மாதங்கள் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மாதம்	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்
பாதணிகளின் எண்ணிக்கை	7625	5699	6408

(i) மூன்று மாதங்களும் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(ii) ஏப்ரல் மாதத்தை விட பெப்ரவரி மாதம் எத்தனை பாதணிகள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டன?

.....

www.ikedu.lk

21) மணித்தியால முள் ஓர் எண்ணிலிருந்து அடுத்த எண்ணிற்குச் செல்வதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடங்களாகும்?

.....

22) கொடி ஒன்று கட்டுவதற்கு 5m நீளமுள்ள கயிறு தேவைப்படுகின்றது. இப்போது 3m 65cm நீளமுள்ள ஒரு கயிற்றுத் துண்டு உள்ளது. மேலும் தேவையான கயிற்றுத் துண்டின் நீளம் யாது?

.....

23) 86 இலந்தைப் பழங்களை ஒருவருக்கு 4 வீதம் வழங்கும் போது எத்தனை பழங்கள் எஞ்சி இருக்கும்?

.....

24)




இவ் நாணயத் தாளின் பெறுமதி யாது?

.....

25) போத்தல் ஒன்றின் கொள்ளளவு 5*l* ஆகும். தற்போது அப் போத்தலினுள் 3*l* 750*ml* நீர் உள்ளது. போத்தலை நிரப்புவதற்குத் தேவையான நீரின் அளவு யாது?

.....

26)



இவ் உருவினுள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?


.....

27) 2kg 750g சீனியை எத்தனை 250g கொண்ட பொதிகளாகக் கட்ட முடியும்?

.....

28) பென்சில் பெட்டி ஒன்றின் விலை ரூபா 160.00 ஆகும். ஐந்து பென்சில் பெட்டிகளை வாங்கி ரூபா 1000.00 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது?

.....



29) மாணவர்கள் விரும்பும் காலை உணவு பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.

(i) பிட்டை விட ரொட்டியை எத்தனை மாணவர்கள் கூடுதலாக விரும்புகின்றனர்?

.....





(ii) தரவுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

www.lkedu.lk

• **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தில் ஏழாம் படிமுறை எது?

(1) 
(2) 
(3) 
(4) 

31) உடல் உளச் சுகத்திற்கான செயற்பாடுகளில் நான்காம் படிமுறை எது?

(1) உடலைத் தளர்த்துதல்
(2) பிரார்த்தனை
(3) உள்ளத்தைத் தளர்த்துதல்
(4) திடசித்தம்

32) எமது நாட்டின் தேசியக் கொடியில் பச்சை நிறப்பட்டி எவ்வினத்தவரைக் குறிக்கின்றது?

(1) பறங்கியர் (2) சிங்களவர் (3) தமிழர்கள் (4) முஸ்லிம்கள்

33) தேசிய இலச்சினையில் தார்மீகத்தைக் குறிப்பது

(1) நிறைகுடம் (2) மலரிதழ் (3) தர்மச்சக்கரம் (4) சூரியன்

34) இலங்கை வாழ் மூவின மக்களாலும் வணங்கப்படும் புனித மலை எது?

(1) இமயமலை
(2) நமுனகுலமலை
(3) பீதுருதாலகாலமலை
(4) சிவனொளிபாதமலை

35) இலங்கையின் தேசிய மரம் எது?

(1) நாகமரம் (2) நாகமலர் (3) சவுக்கு (4) வாகை

36) 

இக் குறியீடு

(1) நேரே செல்லத் தடை
(2) புகைத்தல் தடை
(3) ஒலி எழுப்பத் தடை
(4) குப்பை எரிக்கத் தடை

37) மகாவலி கங்கை சிறப்புப் பெறுவது இலங்கையில் உள்ள

(1) உயரமான நீர்வீழ்ச்சியாகும்.
(2) அழகிய தீவு ஆகும்.
(3) உயரமான மலை ஆகும்.
(4) நீளமான நதி ஆகும்.

38) அன்னமுன்னா பூக்கும் மாதம் எது?

(1) ஆவணி (2) ஐப்பசி (3) கார்த்திகை (4) சித்திரை

39) காலவேறுபாடின்றிப் பூக்கள் பூக்கும் தாவரம் எது?

(1) பனை (2) இறப்பர் (3) தென்னை (4) வாகை

40) இலைகளைச் சுருட்டி கூடமைக்கும் பிராணி

(1) செவ்வெறும்பு (2) கறையான் (3) வண்ணத்துப்பூச்சி (4) நத்தை


41) தாவரமொன்று நிலையாக இருப்பதற்கு உதவும் தாவரப் பகுதி

(1) அரும்பு (2) கிளை (3) தண்டு (4) வேர்

www.ikedu.lk

42) ஒளடதபானங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் பூ எது?

(1) செவ்வரத்தம்பூ (2) வில்வம்பூ (3) அலரிப்பூ (4) கடதாசிப்பூ

43) 

அருகே தரப்பட்டுள்ள பூ

(1) அல்லி (3) அலரி

(2) போகன்விலா (4) செவ்வரத்தை

44) கால்கள் அற்ற பிராணி

(1) மண்புழு (2) கிவி (3) மரவட்டை (4) பூரான்

45) கடிகாரப் பறவை எனக் கூறப்படும் பறவை

(1) 

(2) 

(3) 

(4) 

46) சிகிரியாக் குன்று மிகவும் பிரசித்தி பெற்றது

(1) அழகிய குன்றாகையால்

(2) சுவரோவியத்தால்

(3) செதுக்கல் வேலைப்பாட்டினால்

(4) உயரமான குன்றாகையால்

47) 


இக் குறியீடு

(1) தேநீர் அருந்தவும் (3) நொருங்கக் கூடியது

(2) பாதுகாப்பற்றது (4) கவனமாகக் கையாளவும்

48) பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டு எது?

(1) காற்பந்தாட்டம் (2) கரம் (3) கிளித்தட்டு (4) கூடைப்பந்தாட்டம்

49) 


படத்தில் காட்டப்படும் தையல்?


(1) கம்பளித்தையல் (3) சங்கிலித்தையல்


(2) நரம்புத்தையல் (4) காக்காத்தையல்

50) வீட்டுத் தோட்டம் செய்வதற்குப் பயன்படுத்தும் உபகரணம் எது?

(1) 

(2) 

(3) 

(4) 

51) கட்புல தொடர்பாடல் ஊடகங்கள் எவை?

(1) தொலைக்காட்சி, வானொலி (3) ஒலிபெருக்கி, பத்திரிகை

(2) பத்திரிகை, சுவரொட்டி (4) கணினி, அரங்கு

52) தயிர் எதிலிருந்து தயாரிக்கப்படுகின்றது?

(1) முட்டை (2) இளநீர் (3) பசுப்பால் (4) தேன்

www.ikedu.lk

53) மாசிக்கருவாடு, மஞ்சள்தூண்டு போன்றவற்றைத் துண்டுகளாக்குவதற்கு மிகப் பொருத்தமான உபகரணம்

(1) அரிவாள் (2) பாக்குவெட்டி (3) சீவுளி (4) கத்தி

54) இலங்கைக்கு மிக அண்மையில் அமைந்துள்ள நாடு எது?

(1) இந்தியா (2) அமெரிக்கா (3) சீனா (4) அவுஸ்திரேலியா

55) உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களில் மிகப் பிரதானமானது.

(1) நிறை (2) உற்பத்தித்திகதி (3) போசனைக்கூறு (4) காலாவதித் திகதி

56) நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது

(1) நீரிழிவு (2) மலேரியா (3) டெங்கு (4) சிக்கன்குனியா

57) வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணி அல்லாதது

(1) நாய் (2) பூனை (3) பசு (4) கிளி

58) பாதசாரிகள் வீதியால் செல்ல வேண்டிய பக்கம் எது?

(1) இடது, வலது பக்கம் (3) வலது பக்கம்

(2) இடது பக்கம் (4) நடுவே

59) பாடசாலையின் தலைமைப் பொறுப்பை வகிப்பவர்

(1) ஆளுநர் (2) பிரதி அதிபர் (3) அதிபர் (4) ஜனாதிபதி

60) ஐந்துபேர்களில் ஒருவராக ஆசிரியர் காணப்படுகின்றார். அத்தகை பெருமை மிக்க ஆசிரியர்களில் உமது மனங்கவர்ந்த ஆசிரியரை ஏன் உமக்கு பிடித்துள்ளது. என்பதை மூன்று வாக்கியங்களில் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருத்தல் வேண்டும்.

1) .....

.....

2) .....

.....

3) .....

.....

www.ikedu.lk

Selvasanthi Publication

ஞானோதயம் 2020

தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

முன்னோடிப் பரீட்சை

வினாத்தாள் - I

(புதிய பாடத்திட்டம்)

நேரம் - 45 நிமிடங்கள்

02

சுட்டெண் : .....

ஆசிரியர்கள்
திரு. செ. திலக்
திரு. செ. வினோத்குமார்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாத் தொகுதிகள் உள்ளன.
- அனைத்து வினாக்களிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீசிலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	

பக்கம் 2 ஐ பார்க்க...

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்


WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu


ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

● தரப்பட்ட மூன்று உருக்களுள் ஒன்று வேறுபட்டது. அவ்வுருவைத் தெரிக.


1)



(1)




(2)




(3)


2)



(1)




(2)





(3)

● 3 ஆம் 4 ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவைத் தெரிவு செய்க.

3)









(1)




(2)





(3)




4)









(1)



(2)



(3)



5) நிமாலி பணக்கார வீட்டுப்பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும் அதனை யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள். எனின் அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது.

(1) பொதுநலவாதி (2) சுயநலவாதி (3) வள்ளல்

www.ikeou.lk

6) தவணைப் பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்குப் பணமில்லாது கஸ்ரப்பட்டுக் கொண்டிருந்த நண்பனுக்கு ஆதர் தன்னிடம் இருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து உதவி செய்தான். எனின் இதிலிருந்து உணரக்கூடியது யாது?

(1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

(2) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

(3) அன்பான சிநேகிதனை ஆபத்திலறியலாம்.

7) பின்வரும் எண்தொடரில் ஓர் எண் பொருந்தாது அவ் எண்ணைத் தெரிக.

1 — 16 — 49 — 62 — 100 — 144 — 196

(1) 49 (2) 62 (3) 144

8) பின்வரும் எண் தொடரில் வெற்றிடங்களில் வரவேண்டிய எண்களைத் தெரிக.

9, 225, 16, 196, 25, 169, ..., ...

(1) 36, 144 (2) 30, 121 (3) 36, 100


9) தொடரிலக்கத்தில் 60 நாணயத் தாள்கள் ஒரு கட்டாக அடுக்கப்பட்டிருந்தன. முதலாவதாக உள்ள நாணயத் தாளின் எண் 4625 எனின் கடைசியாக உள்ள நாணயத்தாளில் உள்ள எண் யாது?


(1) 4684 (2) 4685 (3) 4700


10) ஒரு நகரத்தில் உள்ள 150 வீடுகளில் 40 வீடுகளில் கணினிகள் இருக்கின்றன. 140 வீடுகளில் தொலைக்காட்சிகள் இருக்கின்றன. எனின் எத்தனை வீடுகளில் இரண்டு பொருட்களும் காணப்படுகின்றன?


(1) 100 வீடுகளில் (2) 30 வீடுகளில் (3) 40 வீடுகளில்

11) அருகே உள்ள வடிங்களை மட்டும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சதுரம் எது?



(1) 


(2) 

(3) 

12) 2020ம் ஆண்டு மாசிமாதம் இருபத்தொன்பதாம் திகதி பிறந்த ஒருவன் தனது முதலாவது பிறந்தநாள் கொண்டாடத்தை எத்தனையாம் ஆண்டு கொண்டாடுவான்?

(1) 2021ம் ஆண்டு (2) 2024ம் ஆண்டு (3) 2023ம் ஆண்டு


www.ikeou.lk

13) 

தரப்பட்ட உருவில் இனங்காணக் கூடிய முக்கோணிகளினதும் செவ்வகங்களினதும் எண்ணிக்கைகள் முறையே

(1) 8, 5 (2) 5, 3 (3) 8, 3

14) முன்னே தரப்பட்டுள்ள அட்டையை மடித்து ஒட்டும் போது தோன்றும் சரியான வடிவம் எது?






(1)



(2)



(3)

15) தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடையைத் தெரிக.

5 ✡ 8 = 80 ○ 2

இக்குறியீடுகளுக்குரிய கணிதச் செய்கை

(1) ✡ - கூட்டல்
○ - வகுத்தல்

(2) ✡ - பெருக்கல்
○ - வகுத்தல்

(3) ✡ - பெருக்கல்
○ - கழித்தல்

16) ஆசிரியர் ஒருவர் மாணவன் ஒருவனிடம் உனது பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பவற்றைக் கூறுமாறு கேட்டார். அவன் அதற்கு "2018ம் ஆண்டு மாசி மாதம் 30ம் திகதி பிறந்தேன். எனக் கூறினான்." அவன் கூறிய கூற்று

(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது

17) சதுரவடிவக் காணியைச் சுற்றி சம இடைவெளியில் சில தூண்கள் நடப்பட்டிருந்தன. அவற்றின் எண்ணிக்கை 32 ஆகும். எனின் அக்காணியின் ஒரு பக்கத்தில் நின்று பார்க்கும் போது தெரியும் தூண்களின் எண்ணிக்கை யாது?

(1) 8 தூண்கள் (2) 9 தூண்கள் (3) 7 தூண்கள்

18) இரு இலக்கமுள்ள எண்ணின் இடங்கள் ஒன்றோடொன்று மாற்றப்பட்டு எழுதும் போது புதிய எண், பழைய எண்ணை விட 18 அதிகமாக உள்ளது. அவ் எண் யாது?

(1) 75 (2) 52 (3) 57

19) பாதுசா தான் அமாவாசை தினத்தன்று இரவு வானில் தென்பட்ட பூரணசந்திரனைப் பார்த்து களிப்புற்றேன் எனக் கூறினாள். இக் கூற்றுத் தவறானது ஆகும். அதனைச் சரிசெய்வதாயின் மாற்ற வேண்டிய விடயம்


(1) **களிப்புற்றேன்** என்பதை **வேதனையடைந்தேன்** என மாற்றுதல்.


(2) **இரவு** என்பதை **பகல்** என மாற்றுதல்.


(3) **அமாவாசை தினம்** என்பதை **பௌர்ணமி தினம்** என மாற்றுதல்.


www.ikeau.lk

20) சம அளவிலான ஆறு பக்கங்களைக் கொண்ட வடிவமொன்று இரண்டு தடவைகள் மடிக்கப்பட்டு இரண்டு துளைகள் இடப்பட்ட வடிவம் முன்னே தரப்பட்டுள்ளது. அதனை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?



(1) 


(2) 

(3) 

21) ஒரு பேருந்தில் செல்லும் 9 பயணிகளுக்கான பயணச்சீட்டின் விலை ரூபாய் 585.00 எனின் 21 பயணிகளின் பயணச்சீட்டின் மொத்த விலை யாது?

(1) ரூபாய் 1365.00 (2) ரூபாய் 1164.00 (3) ரூபாய் 1900.00

- **தரப்பட்ட வரிப்படத்தை அவதானித்து 23, 24 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**





- ஆண்கள்
- பெண்கள்
- கற்றவர்கள்
- தொழிலாளர்கள்

22) ஆண்களில் கற்ற தொழில் செய்பவர் யார்?

(1) T (2) U (3) S


23) பெண்களில் தொழில் செய்பவர் யார்?


(1) R (2) V (3) Q

24) தந்தையின் தற்போதைய வயது அவருடைய மகனின் வயதைப் போல் மூன்று மடங்காகும். 5 வருடங்களின் முன்பு தந்தையின் வயது மகனின் வயதைப் போல் நான்கு மடங்காகும். இப்போது மகனின் வயது யாது?


(1) 14 வயது (2) 16 வயது (3) 15 வயது

25) நகரம், மாகாணம், நாடு, மாவட்டம் என்பதை அருகே உள்ள உரு குறிக்கின்றது. இதில் மாவட்டத்தைக் குறிக்கும் வடிவம்





(1)



(2)



(3)

www.ikedu.lk

26) ஆங்கில எழுத்துக்களில் இடப்பட்ட பகுதியில் வரவேண்டிய சொற்களைத் தெரிக.

திண்மவுரு	கனவுரு	B
A	செங்கோணம்	விரிகோணம்
தளவுரு	C	வட்டம்

(1) A - கோணம் B - நான்முகி C - செவ்வகம்

(2) A - கோணம் B - சதுரம் C - கூம்பகம்

(3) A - முப்பரிமாணம் B - கூர்ங்கோணம் C - முக்கோணி

27) தரப்பட்ட சொற்கூட்டத்துள் ஒரு சொல் ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அச் சொல்லைத் தெரிக.

ஜனாதிபதி, ஆளுநர், பிரதமர், மருத்துவன், அதிபர், நிருபர்

(1) ஜனாதிபதி (2) நிருபர் (3) மருத்துவன்

28) விமல், கமல், ராகவ், தப்சி, ராஜி ஆகியோர் வாங்கு ஒன்றில் அமர்ந்திருந்தனர். இடமிருந்து வலமாகப் பார்க்கும் போது ராகவ் இற்குப் பின்னால் கமலும், ராகவிற்கு முன்னால் தப்சியும் இருக்கின்றனர். ராஜிக்குப் பின்னால் விமலும், விமலுக்குப் பின்னால் தப்சியும் இருக்கின்றனர். இதன்படி நடுவில் இருப்பவர் யார்?

(1) கமல் (2) தப்சி (3) ராஜி

29) வீதி ஒன்றில் வரிசையாக சிவப்பு, பச்சை, நீலம், வெள்ளை, மஞ்சள் எனும் ஒழுங்கில் 200 கொடிக்கம்பங்கள் நடப்பட்டிருந்தன. இதன்படி 169 ஆவது கொடிக்கம்பத்தின் நிறம் யாது?

(1) வெள்ளை (2) நீலம் (3) மஞ்சள்

30) மிகச் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிக.

(1) வானத்திலுள்ள நட்சத்திரம் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன.

(2) வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றது.

(3) வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன.

31) இரு ஒற்றை எண்களைக் கூட்டும் போது வரும் எண்

(1) ஓர் ஒற்றை எண் ஆகும்.

(2) ஓர் இரட்டை எண் ஆகும்.

(3) ஓர் ஒற்றை அல்லது இரட்டை எண் ஆகும்.

www.ikedu.lk

32) ஓர் ஓட்டப் பந்தயப் போட்டியில் இரண்டாவதாக ஓடிச் செல்லும் ஒருவரை பின்னுக்குத் தள்ளி முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்கள். எனின் இப்போது உங்களுடைய நிலை என்ன?

(1) முதலாம் நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை


33) வெற்றிடங்களில் வரவேண்டிய சொற்களைத் தெரிக.

..... போல் கூடி வாழ வேண்டும்.
..... போல் துள்ளி ஓட வேண்டும்.
..... போல் எங்கும் செல்ல வேண்டும்
..... போல் நன்மை பொழிய வேண்டும்.

(1) சிங்கம், அட்டை, முயல், புத்தகம்

(2) வௌவால், குரங்கு, மேகம், வெயில்

(3) காகம், கன்று, மேகம், மழை

34)  

இவ் இரண்டு உருக்களிலும் இனங்காணக் கூடிய வித்தியாசங்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 வித்தியாசங்கள்

(2) 5 வித்தியாசங்கள்


(3) 6 வித்தியாசங்கள்


35) **APTITUDE = PAITUTED** என எழுதப்படின் **LANGUAGE** என்பதை எவ்வாறு எழுத முடியும்?

(1) ALGNAUEG (2) EGAUGNAL (3) UEGALANG

36) நிகிசா தண்டவாளத்தில் ஏறி நின்று தண்டவாளத்ததைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். எனின் அவள் கண்களுக்கு தண்டவாளம் தெரியும் விதங்களில் மிகவும் சரியானது.

(1) 

(2) 


(3) 

37) யதுமி ரூபாய் 2.00, ரூபாய் 3.00, ரூபாய் 5.00 பெறுமதியான இனிப்புக்களை சம எண்ணிக்கையில் வாங்கினாள். அதற்காக அவள் ரூபாய் 150.00 ஐச் செலவளித்தாள். எனின் அவள் வாங்கிய இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 30 இனிப்புக்கள் (2) 45 இனிப்புக்கள் (3) 60 இனிப்புக்கள்.

www.ikedu.lk

38) குற்றிகள் சில ஒன்றன் மீதொன்று அடுக்கப்பட்ட வடிவம் அருகே தரப்பட்டுள்ளது. இதற்காகப் பயன் படுத்தப்பட்ட குற்றிகளின் எண்ணிக்கை யாது?



(1) 20 குற்றிகள்


(2) 24 குற்றிகள்

(3) 19 குற்றிகள்

39) பாடசாலை ஒன்று ஆரம்பிக்கும் போது முதலாவது மணி ஒலிக்கும். இரண்டாவது மணியானது 10 நிமிடத்தின் பின்னரும் மூன்றாவது மணி 5 நிமிடத்தின் பின்னரும் ஒலிக்கும். அடுத்து வரும் ஒவ்வொரு 40 நிமிடத்தின் பின்னர் மணி ஒலிக்கும் எனின் ஆறாவது தடவை மணி ஒலிக்கும் போது நேரம் 9.30 எனின் பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் யாது?

(1) காலை 7.15 (2) காலை 7.20 (3) காலை 7.30

40) ஒரு அடைப்பின் ஒரு பக்க நீளம் 10m ஆக இருக்குமாறு வரையப்பட்ட பாதை நெய்யரி தரப்பட்டுள்ளது.



இந்த நெய்யரியில் கமல் A இல் இருந்து G, F, E ஊடாக D க்கும், விமல் A இல் இருந்து B, C, D ஊடாக E க்கும் பயணம் செய்தனர். இதற்கேற்ப

(1) இருவரும் ஒரே அளவு தூரம் பயணம் செய்தனர்.

(2) விமல் கூடிய தூரம் பயணம் செய்துள்ளான்.

(3) இருவரும் 220m தூரம் பயணம் செய்துள்ளனர்.

www.lkedu.lk

ஞானோதயம் 2020

Selvasanthi Publication

தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

முன்னோடிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 1 மணி 15 நிமிடங்கள்

(புதிய பாடத்திட்டம்)

சுட்டெண் : .....

02

ஆசிரியர்கள்
திரு. செ. திலக்
திரு. செ. வினோத்குமார்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாத் தொகுதிகள் உள்ளன.
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீசிலனையின் மதீப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதீப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	

பக்கம் 2 ஐ பார்க்க...

www.ikeau.lk

01) தரப்பட்ட பந்தியை நன்றாக வாசிக்குக.

விடியற் காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத்தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

● **பந்தியை மட்டும் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) இரட்டைக் கிளவிச் சொல்லை எழுதுக. .....

(ii) அடுக்கு மொழிச் சொல்லை எழுதுக. .....

(iii) பெயரடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. .....

(iv) சந்தை நோக்கி வருபவர்கள் யார்? .....

(v) **'தொழிலாளர்கள்'** என்பதைக் குறிக்கும் சொல் எது? .....

(vi) விவசாயிகள் எதனுடன் வயலுக்குச் செல்கின்றனர்? .....

02) சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) (1) நட்சத்திரங்கள் (2) நற்சத்திரங்கள் (3) நட்ச்சத்திரங்கள் (4) நட்சத்திறங்கள்

(ii) (1) அனாகரிகம் (2) அநாகரிகம் (3) அநகாரிகம் (4) அநாகரீகம்

03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

(i) ..... பாடசாலை எங்கே உள்ளது? (அவை, உமது, அவள்)

(ii) அந்தி வானம் செந்நிறமாகக் ..... (காணப்பட்டது, காணப்பட்டன)

(iii) மான் கூட்டம் புல்வெளியில் ..... (நின்றன, நின்றது)

(iv) பாபுவும் சீதையும் இணைபிரியா ..... (நண்பிகள், நண்பர்கள்)

04) பொருத்தமான அடைமொழிச் சொல்லைத் தெரிந்து வெற்றிடங்களில் எழுதுக.

சுவைத்துக்	கறுப்புப்	வெள்ளைப்

(i) ..... பூனை ..... பாலை ..... குடித்தது.

05) இரு சுடர்களையும் எழுதுக.

(i) ..... **(ii)** .....

www.ikeu.lk

சுட்டெண் : .....

06) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) பலா : சுளை என்பது போல கற்றாளை : ..... (பருப்பு, சதை, சோறு)

(ii) தாய் தன் குழந்தையைக் .....ப் பார்த்துக் கொண்டார். இதில் வெற்றிடத்தில் வரவேண்டிய மரபுத்தொடர் (கண்ணும்கருத்துமாக, கவனயீனமாக)

(iii) இளவேனில், முதுவேனில், வசந்தம் போன்றவை ..... ஆகும்.
(மாதங்கள், காலங்கள்)

07) கீழே தரப்பட்டுள்ள பாடலில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

குடை பிடித்து செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு

.....

குழந்தைகளே கேளீர்

08) கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து சரியான விடையை எழுதுக.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திரசாலமோ கூறாயம்மா

இப் பாடலில் வரும் உவமானத்தை எழுதுக. .....

09) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(i) ஆண்பால் உயர்திணைப் பெயர்ச்சொல்
(1) புதல்வி (2) புத்திரன் (3) சேவகி (4) வந்தான்

(ii) அ.்றிணைப் பன்மை இறந்தகால வினைச்சொல்
(1) வந்தார்கள் (2) ஓடுகின்றன (3) மேய்ந்தன (4) ஆடுகள்

10) பின்வரும் கூற்றுக்கள் அறிவித்தலா?, அறிவுறுத்தலா? என எழுதுக.

(i) நாளை பெற்றோருக்கான கூட்டம் நடைபெறும். .....

(ii) விடைத்தாள்களின் எல்லாப் பக்கங்களிலும் உங்களது சுட்டெண்ணைச் சரியாக எழுதுக.

.....

11) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.


(i) Pineapple : ..... **(ii)** Spider : .....

12) ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.


(i) புகையிரதம் : ..... **(ii)** சூரியகாந்தி : .....

www.ikedu.lk

13) பின்வரும் உருக்களுக்கான சிங்களச் சொல்லைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(i) 

.....

(ii) 


.....

14) தமிழ்க் கருத்தை எழுதுக.

(i) வத்துர பொன்ன. - .....

(ii) வேலாவ கீயத? - .....

● 15 தொடக்கம் 29 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை எழுதுக.

15) 

அருகே தரப்பட்ட எண்சட்டம் குறிக்கும் எண்ணை சொற்களில் எழுதுக.

.....

16) (i) சதுரமுகி ஒன்றில் உள்ள விளிம்புகள், உச்சிகள், முகங்கள் என்பவற்றின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(ii) நான்கு முக்கோண பக்கங்களை மட்டும் கொண்ட திண்மவுரு எது? .....

17) 

சாடியில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக.


.....

18) (i) நிழற்றப்பட்ட பகுதிக்குரிய பின்னத்தின் கீழ்க் கோடிடுக.




(1) $\frac{5}{10}$ (2) $\frac{4}{10}$ (4) $\frac{6}{10}$

(ii) அரைப்பகுதிக்கு நிறந்தீட்டுக.



19) ஒரு வாங்கில் நால்வர் வீதம் 90 வாங்குகளில் எத்தனை பேர் அமரமுடியும்?

.....

20) 

இவ் உருவில் வரையக் கூடிய சமச்சீர் கோடுகளை வரைக.

www.lkedu.lk

21) காலை 9.30 மணியளவில் ஆரம்பித்த கலை நிகழ்வானது 2 மணித்தியாலம் 30 நிமிடங்களில் நிறைவு பெற்றது. எனின் கலை நிகழ்ச்சி நிறைவு பெற்ற நேரம் யாது?

.....

22) 

வட்டத்தில் உள்ள எவ்விரு எண்களைக் கூட்டும் போது கூட்டுத் தொகை 650 வருகின்றது?

.....

23) தரப்பட்ட நாட்காட்டியை அவதானித்து விடை எழுதுக.

வைகாசி - 2020

திங்க	செவ்	புதன்	வியா	வெள்	சனி	ஞாயி
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

(i) 28ம் திகதிக்கு மூன்று நாட்களுக்கு முந்திய நாள் எது?

.....

(ii) இம் மாதத்தில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?

.....

24) 1850g சீனியை அடிக்கல்லுத் தராசில் அளப்பதற்கு பயன்படுத்தக் கூடிய படிக்கற்களை எழுதுக. (ஒரு படிக்கல் ஒருமுறை மட்டுமே)

..... + ... + ... + ... + ...

25) (i) பென்சில் ஒன்றின் விலை ரூபாய் 12.50 ஆகும். 5 பென்சில்கள் வாங்குவதற்குச் செலவாகும் பணத்தொகை யாது?

.....

(ii) கடைக்காரரிடம் ரூபாய் 100.00 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது?

.....

26) எண்கோலத்தில் அடுத்து வரவேண்டிய இரு எண்களையும் எழுதுக.

5, 10, 20, 40, ..., ...

27) தரப்பட்ட கடிகார முகம் காட்டும் நேரத்தை வாசிக்கக் கூடிய முறைகள் இரண்டு எழுதுக.



(i) .....

(ii) .....

28) ஒரு மீற்றர் நாடாவை நான்கு சம துண்டுகளாக்கினால் ஒரு துண்டின் நீளம் யாது?

.....

www.lkedu.lk

29) தரம் ஐந்து வகுப்பில் 35 மாணவர்கள் உள்ளனர். ஒருவரிற்கு 5 பென்சில்கள் வீதம் வகுப்பில் உள்ள அனைவருக்கும் வழங்குவதற்குத் தேவையான பென்சில்களின் எண்ணிக்கை யாது?

.....

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) இளஞ்சிவப்பு நிறத் தளிர்களை உடைய தாவரம்

(1) வெற்றிலை (2) ஆமணக்கு (3) எலுமிச்சை (4) நாகமரம்

31) தாவரங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணி

(1) வண்ணத்துப்பூச்சி (2) நத்தை (3) தேனீ (4) அணில்

32) **விதானம்** போன்ற அமைப்பைக் கொண்ட தாவரம்

(1) பனை (2) கமுகு (3) ஈச்சை (4) மா

33) தாவரப் பகுதிகளுக்குத் தேவையான நீர், கனியுப்புக்களை அகத்துறிஞ்சி வழங்குவது எது?

(1) வேர் (2) கிளை (3) தண்டு (3) இலை

34) 

இப் பூ

(1) முருங்கை (3) அகத்தி

(2) வாகை (4) நாகமலர்

35) பொதுவாக இரவில் மலரும் பூக்களின் நிறம் யாது?

(1) சிவப்பு (2) வெள்ளை (3) மஞ்சள் (4) ஊதா

36) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களின் எண்ணிக்கை யாது?

(1) பத்து (2) ஏழு (3) ஒன்பது (4) எட்டு

37) உயிரினங்கள் வாழக்கூடிய ஒரே கோள்

(1) புதன் (2) புவி (3) வியாழன் (4) யுரோனஸ்

38) 

இக் குறியீடு

(1) இவ் வழியால் செல்க (3) மேலே பார்க்கவும்

(2) இப்பக்கம் மேலே (4) நொருங்கக் கூடியது

39) பச்சோந்தியின் சிறப்பியல்பு யாது?

(1) எதிரிகளைக் கண்டால் துர்நாற்றத்தை வெளிவிடும்.

(2) தனது வாலை அறுத்து விட்டுத் தப்பிச் செல்லும்.

(3) சூழலுக்கு ஏற்ப தனது உடலின் நிறத்தை மாற்றக் கூடியது.

(4) மிகவும் கூர்மையான பார்வைத் திறனுடையது.

40) சூழலில் உள்ள அழுக்குகளை உண்டு சுத்தப்படுத்தும் பிராணி

(1) 

(2) 

(3) 

(4) 


www.ikedu.lk

41) விவசாயிகளின் நண்பன் எனக் கூறப்படுவது
(1) மயிர்க்கொட்டி (2) நத்தை (3) மண்புழு (4) பன்றி

42) வசந்த காலத்தின் போது கூடுதலாகக் குரலெழுப்பும் பறவை எது?
(1) மைனா (2) ஆந்தை (3) மயில் (4) குயில்

43) நீராவியில் அவித்துச் சமைக்கப்படும் உணவு
(1) ரொட்டி (2) தோசை (3) இடியப்பம் (4) சோறு

44) இச் செயற்பாட்டின் போது அவதானிக்க முடியாதது






(1) நீர் சூடாகும்.
(2) நீர் ஆவியாகும்.
(3) நீர் படிப்படியாகக் குறையும்.
(4) நீர் குளிர்ச்சியடையும்.

45) அசுத்த நீரின் பயன்பாட்டினால் ஏற்படும் நோய்
(1) நீரிழிவு (2) மாலைக்கண் (3) மலேரியா (4) செங்கண்மாரி

46) இலங்கையின் தேசிய விளையாட்டு
(1) கரப்பந்தாட்டம் (2) காற்பந்தாட்டம் (3) மேசைப்பந்து (4) வலைப்பந்து

47) தேசியக் கொடியில் தமிழ் மக்களைக் குறிக்கும் நிறம் எது?
(1) பச்சை (2) செம்மஞ்சள் (3) மஞ்சள் (4) சிவப்பு

48) சாதாரண உள்ளூர்த் தபாலிற்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி யாது?
(1) ரூபா 10.00 (2) ரூபா 15.00 (3) ரூபா 12.00 (4) ரூபா 20.00

49) சுவரின் நிலைக்குத்துத் தன்மையை அறிவதற்கு மேசன் பயன்படுத்தும் உபகரணம் எது?
(1) 
(2) 
(3) 
(4) 


50)  இவ் உருவில் காணப்படுபவர்
(1) கலாநிதி ரீ.பீ. ஜாயா
(2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
(3) c.w.w கன்னங்கரா
(4) ஆதர். சி. கிளாக்

51) இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
(1) 1945ம் ஆண்டு (2) 1993ம் ஆண்டு (3) 1948ம் ஆண்டு (4) 1972ம் ஆண்டு

52) இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட குளம் எது?
(1) இரணைமடுகுளம் (3) மின்னேரியாகுளம்
(2) கலாவாவி (4) அபயவாவி

www.lkedu.lk

53) இக் கரை அலங்காரத்தின் பெயர்



(1) சவடி (3) கல்பிந்து

(2) இரட்டைச்சுழி (4) மலரிதழ்

54) வடமாகாணத்துள் அடங்காத மாவட்டம்


(1) கிளிநொச்சி (2) முல்லைத்தீவு (3) வவுனியா (4) புத்தளம்

55) இளநீரைப் பதப்படுத்துவதன் மூலம் பெறப்படுவது

(1) வினாகிரி (2) தேன் (3) தயிர் (4) பன்னீர்

56) தேசப்படங்களில் நதிகளைக் குறித்துக் காட்டும் நிறம்

(1) பச்சை (2) நீலம் (3) கறுப்பு (4) சிவப்பு

57) 

அருகே தரப்பட்டுள்ள உபகரணம்

(1) காற்று வேகமானி

(2) திசையறிகருவி

(3) காற்றுத் திசைகாட்டி

(4) தொலைக்காட்டி

58) மாணவரிடம் காணப்பட வேண்டிய பண்புகளில் ஒன்று

(1) சகபாடிகளுடன் முரண்பட்டுக் கொண்டிருத்தல்.

(2) எப்போதும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருத்தல்.

(3) கற்றல் வேளையிலும் விளையாடிக் கொண்டிருத்தல்.

(4) தொலைக்காட்சியை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருத்தல்.

59) ஆரம்ப காலங்களில் மிகவும் பாரமான பொருட்களைத் தூக்கிச் செல்ல எப்பிராணியைப் பயன்படுத்தினர்?

(1) சிம்பன்சி (2) கரடி (3) குதிரை (4) யானை

60) **"எனது பாடசாலையில் உள்ள சிறுவர் நூலகம்"** என்னும் தலைப்பினைப் பயன்படுத்தி மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக இருத்தல் வேண்டும்.

1) .....

.....

2) .....

.....

3) .....

.....

www.ikedu.lk

Selvasanthi Publication

ஞானோதயம் 2020

தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

முன்னோடிப் பரீட்சை

வினாத்தாள் - I

நேரம் - 45 நிமிடங்கள்

(புதிய பாடத்திட்டம்)

08

சுட்டெண் : .....

ஆசிரியர்கள்
திரு. செ. திலக்
திரு. செ. வினோத்குமார்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாத் தொகுதிகள் உள்ளன.
- அனைத்து வினாக்களிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீசிலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்.	


பக்கம் 2 ஐ பார்க்க...




www.lkedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
